## சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம் - 2022

---------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஈசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் நிதியத்தைக் கணக்கொழிப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றீடு இல்லாவிடின் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குறித்த விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு அவ்வாளுகைக்குட்பட்ட தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலநேரத்திலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் தாக்கமளிப்பதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்து கொண்ட போதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் சரியான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயபூர்வத் தன்மையை மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளனவா என்பதும் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணப்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் ஆளுநர் சபையால் வழங்கப்பட்ட ஏதாவதொரு எழுத்துமூலச் சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.ஆம் பந்தியின் மூலம் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1)(இ) | மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஆவணம் தயாரிக்கப்பட்டிருந்தாலும், அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் பொதுத்திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய வரவு செலவுத் திட்டத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் பிரதியொன்று அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தி | 2022 ஆம் ஆண்டில் நிதியத்தினால் ரூபா 8,318,010 மதிப்புள்ள கணனிகள் உட்பட்ட பெறுகையொன்று மேற்கொள்ளப்பட்டபோதிலும் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 652,757,142 ஆன மிகையாக இருந்ததுடன் , அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையானது ரூபா 221,057,494 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 431,699,648 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பயனாளிகளின் பங்களிப்புத்தொகை அதிகரித்தமை மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் பிரமாணக்கோவையின் பிரகாரம் ஒவ்வொரு சீட்டிழுப்பிற்கும் முன்னர், அந்தந்த மாதத்தில் சமுர்த்தி மானியத்திலிருந்து விலகிய மற்றும் புதிதாக மானியத்தைப் பெறுகின்ற பயனாளிகளின் தகவல்கள் கணனி தரவுத்தளத்தில் உள்ளிடப்பட்டு சமுர்த்தி மானியத்தைப் பெறுகின்ற பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் நலன்கள் முகாமைத்துவ தொகுதியில் தகவல்கள் நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நாளதுவரையாக்கப்படாமையால் 2022 ஆம் ஆண்டில் 84 பயனாளிகளின் பரிசுத் தொகை நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சரியான நாளதுவரையாக்கலில் தாமதம் ஏற்படுவதால், மற்றொரு பயனாளிக்கு வெற்றி வாய்ப்பிற்கான சந்தர்ப்பம் இழக்கப்படுவதால் ரூபா 16,800,000 ஆன பரிசுத் தொகையை வழங்க முடியாதிருந்தது. | இது போன்ற நிலை எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு CRM அமைப்புக்கு பொறுப்பான தகவல் தொழில்நுட்பத் துறையின் கணினி பகுப்பாய்வாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது, ஒருமுறை சீட்டிழுப்பிற்கான வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்ட பின்னர் அப்பெயர்ப் பட்டியல் தனிப்பட்ட கோவையில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தரவு அமைப்பு நாளதுவரையாககப் பட்டு பயனாளிகளின் பரிசுத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 பெப்ரவரி 01 ஆம் திகதிய சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் பிரமாணக்கோவையின் 26 ஆம் பந்தியின பிரகாரம் ஒவ்வொரு சீட்டிழுப்பின் முடிவிலும், அச்சீட்டிழுப்பு நடைபெற்ற நாளிலிருந்து 03 மாதங்களுக்குள் பரிசுத்தொகை வழங்கப்பட வேண்டியதுடன் வழங்கத் தவறிய பரிசுகளுக்கான மீதமுள்ள பணம் அக்காலப்பகுதியின் இறுதியில் தலைமை அலுவலகத்தின் வீடமைப்பு | வெற்றி பெறும் ஒவ்வொரு பரிசையும் மிக விரைவாக வழங்கிய பின்னர் மீதிப் பணமொன்று இருப்பின் தலைமை அலுவலகத்திற்கு வழங்குமாறு ஒவ்வொரு பரிசுத் தொகை வெளியிடப்படும்போதும் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு கடிதம் மூலம் | பரிசுகளுக்கான மீதமுள்ள பணம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தலைமை அலுவலகத்தின் வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக 46 பரிசுகள் தொடர்பாக ரூபா 9,200,000 தொகையொன்று 04 முதல் 13 மாதங்கள் வரையான கால தாமதத்துடன் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டது. | தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறைப்படுத்தும் போது, அந்தந்தப் பிரதேச செயலகங்களில் பணத்தை வைத்துக்கொண்டு, வருட இறுதியில் பல்வேறு காரணங்களைச் சொல்லி தலைமை அலுவலகத்தின் வீடமைப்பு லொத்தர் கணக்கில் செலவு வைக்கின்றனர். | வேண்டும். |
| (இ) | விசேட வீட்டுத்திட்ட உதவியின் கீழ் கவனம் செலுத்த வேண்டிய குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக சமுர்த்தியாளர்களின் மாதாந்திர பங்களிப்பில் நிறுவப்பட்ட இந்த நிதியத்தில் இருந்து சமுர்த்தியாளர் அல்லாத நபர்கள் உட்பட 2,999 பேருக்கு மீளாய்வாண்டில் ரூபா 947,775,000 ஆன விசேட வீடமைப்பு உதவி வழங்கப்பட்டிருந்தது. | சமுர்த்தி திட்டத்தின் கீழ் இந்த விசேட வீடமைப்புத் திட்டம் வறிய சமூகத்தினருக்காக நடைமுறைப்படுத்தப்படு வதால் சமுர்த்தி மானியம் பெறும் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களை முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் தெரிவு செய்வதற்கான பணிப்பாளர் சபையின் இணக்கப்பாட்டின் பிரகாரம் இவ்வாறு வீடமைப்பு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. | வீடமைப்பு உதவிகள் வழங்கும்போது நிதியத்தில் பங்களிக்கும் சமுர்த்தியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)ஈ பிரகாரம் நிதியத்தின நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் செயலாற்றல் அறிக்கையுடன் பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதி ஒன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் , மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2023 யூன் 07 ஆம் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டதன் பின்னர் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டமையால் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |